53. சிறுமைநீக்குயர்செல்வம்

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

பீத மோர்தரு மிக்க ளித்துயர் பெற்றி யேதுமி லாதுதன்
தாதை யைக்கொலை பண்ணி யீன்றவ டன்னை யும்புணர் பாவிமா
பாத கந்தப நோக்கி யாளிறை பால னான சுவாமியென்
தீது கண்டெதிர் வந்த தேயெங்கள் சிறுமை நீக்குயர் செல்வமே.

பீதம் ஓர் தருமிக்கு அளித்து உயர் பெற்றி ஏதும் இலாது தன்
தாதையைக் கொலை பண்ணி ஈன்றவள் தன்னையும் புணர்பாவிமா
பாதகம் தப நோக்கி ஆள் இறை பாலன் ஆன சுவாமி என்
தீது கண்டு எதிர் வந்ததே எங்கள் சிறுமை நீக்கு உயர் செல்வமே.

தருமி என்னும் ஓர் அந்தணனுக்குப் பொன்னை அளித்து, உயர்ந்த குணம் ஒரு சிறிதும் இல்லாது, தன் தந்தையைக் கொலை செய்து, தன்னைப் பெற்றவளாகிய தாயைப் புணர்ந்த பாவியின் மாபாதகத்தை ஒழிக்கத் திருக்கண்ணோக்கம் செய்து அடிமை கொண்ட கடவுளான சிவபெருமானின் பாலன் ஆன சுவாமி, எங்கள் துன்பத்தை நீக்கும் உயர்ந்த செல்வமான செவ்வேட்பரமன் என் தீமை கண்டு என் முன்னே வந்தது. 1

கருட னன்ன முனிந்த மஞ்ஞையை யாயி ரங்கண னீடெழில்
உருவா மாமொரு மஞ்ஞை யைத்தொடர் நோற்ற மாதவ வுத்தியை
மருவ வேல்வகி ருருவி லேயெழு மஞ்ஞை யைப்பரி யாக்கொளும்
திருவ னென்முனம் வந்த தேயெங்கள் சிறுமை நீக்குயர் செல்வமே.

கருடன் அன்னம் முனிந்த மஞ்ஞையை ஆயிரம் கண்நன் நீடு எழில்
உருவம் ஆம் ஒரு மஞ்ஞையைத் தொடர் நோற்ற மாதவ உத்தியை
மருவ வேல் வகிர் உருவிலே எழு மஞ்ஞையைப் பரியாக் கொளும்
திருவன் என் முனம் வந்ததே எங்கள் சிறுமை நீக்கு உயர் செல்வமே.

கருடனும் அன்னமும் கோபித்த மயிலையும், ஆயிரம் கண்களுடைய உயர்ந்த பேரழகுடைய உருவமான ஒரு மயிலையும், தொடர்ந்து தவம் செய்த பெரிய தவச் செல்வத்தைத் தழுவ வேற்படை பிளந்த உருவிலே தோன்றிய மயிலையும், தனது

வாகனமாகக் கொள்ளும் தெய்வமும் எங்கள் துன்பத்தை நீக்கும் உயர்ந்த செல்வமுமான செவ்வேட்பரம் என் முன்னே வந்தது. 2

சந்த தக்களி வாரி யாயொரு தண்ண ருட்பிர வாகமாய்
எந்தை யாயரு ணந்தி தேவ ரிருக்குங் காவலி னாக்கமாய்
அந்த மாதியின் மைந்த னாயவி ரடிகள் சேவடி சேரவோர்
சிந்தை நல்கிட வந்த தேயெங்கள் சிறுமை நீக்குயர் செல்வமே.

சந்ததம் களி வாரியாய் ஒரு தண் அருள் பிரவாகமாய்
எந்தையாய் அருணந்தி தேவர் இருக்கும் காவலின் ஆக்கமாய்
அந்தம் ஆதியின் மைந்தனாய் அவிர் அடிகள் சேவடி சேர ஓர்
சிந்தை நல்கிட வந்ததே எங்கள் சிறுமை நீக்கு உயர் செல்வமே.

எப்போதும் ஆனந்தக் கடலாய், ஒரு குளிர்ந்த அருள் வெள்ளமாய், எமது தந்தையாய், அருள் நந்திதேவர் இருந்து காவல்புரியும் நன்மையாய், முடிவும் முதலுமில்லாததாய் உள்ள மைந்தனாய் விளங்கும் கடவுளின் செய்ய திருவடி சேர, ஓர் நினைப்பை அளித்திட, எங்கள் துன்பத்தை நீக்கும் உயர்ந்த செல்வமுமான செவ்வேட்பரம் என் முன்னே வந்தது. 3

வில்லை யாறொளி யாயி ணைந்துவி ளங்க மின்களொ ராறுபேர்
நல்ல கைக்கறு பிள்ளை யாயவர் நட்பி னூட்டமு துண்டெலாம்
வல்ல நாயக னாகி யுள்ளவன் வலிய வந்தினி யென்சொலிற்
செல்ல லுன்கட னென்ற தேயெங்கள் சிறுமை நீக்குயர் செல்வமே.

வில்லை ஆறு ஒளியாய் இணைந்து விளங்கும் மின்கள் ஓர் ஆறுபேர்
நல்ல கைக்கு அறுபிள்ளையாய் அவர் நட்பின் ஊட்ட அமுது உண்டு எலாம்
வல்ல நாயகன் ஆகி உள்ளவன் வலிய வந்து இனி என் சொலில்
செல்லல் ஒண்கடன் என்றதே எங்கள் சிறுமை நீக்கு உயர் செல்வமே.

ஆறு ஒளிகளாய் வட்டித்து இணைந்து விளங்கும் கார்த்திகை மாதர்களாக ஆறு பேர்களின் அழகிய கைகளுக்கு ஆறு பிள்ளைகளாய் விளங்கி, அவர் அன்பினால் திருமுலைப் பாலை ஊட்டுவிக்க உண்டு, எல்லாம்வல்ல தலைவனாகியுள்ளவன் வலிய வந்து எங்கள் துன்பம் நீக்கும் உயர்ந்த செல்வமான செவ்வேட்பரமன் "நீ இனி என் சொற்படி நடத்தல் கடன்" என்றது. 4

ஆறு நங்கையர் சூட்டு மாவல ரார மாரெழின் மொய்ம்பினான்
ஈறில் கந்த கிரிப்பொன் மாமணி யாச னத்துறை யெம்பிரான்
நீறு கொண்டபொன் மேனி யன்றின நின்ம லன்றனி யேற்கருட்
சேறு பேணுணர் வீந்த தேயெங்கள் சிறுமை நீக்குயர் செல்வமே.

ஆறுமங்கையர் சூட்டு மாஅலர் ஆரம் ஆர்எழில் மொய்ம்பினான்
ஈறுஇல் கந்தகிரிப் பொன்மாமணி ஆசனத்து உறை எம்பிரான்
நீறு கொண்ட பொன்மேனியன் தினம் நின்மலன்தனியேற்கு அருள்
சேறு பேணு உணர்வு ஈந்ததே எங்கள் சிறுமை நீக்கு உயர்செல்வமே.

கார்த்திகை மாதர் அறுவர் சூட்டுவித்த சிறந்த மலர் மாலைகள் பொருந்திய அழகிய திருத்தோள்களுடையவன்; அழிவில்லாத கந்தமலையில் பொன்னாலும் மாணிக்கத்தாலும் செய்யப்பெற்ற சிறந்த சிம்மாசனத்தில் எழுந்தருளிய எமது கடவுள் தினம் திருநீறணிந்த பொன்மேனியன்; மலமில்லாதவன்; தனியேனாகிய எனக்கு அருளினிமையைப் பேணும் அறிவை எங்கள் துன்பம் நீக்கும் உயர் செல்வமான செவ்வேட் பரமன் அளித்தது. 5

வானின் மாதொரு பாங்க ருந்திரு மானின் மாதொரு பாங்கரும்
கான றாமலர் சூடி வைகம காவ னப்பொடு நடுவமர்
ஞான நாயக னான சண்முக னாயி னேனையு மாள்வதாத்
தேனின் மேன்மொழி தந்த தேயெங்கள் சிறுமை நீக்குயர் செல்வமே.

வானின் மாது ஒரு பாங்கரும் திருமானின் மாதொரு பாங்கரும்
கான் அறாமலர் சூடிவைக மகா வனப்பொடு நடு அமர்
ஞான நாயகன்ஆன சண்முகன் நாயினேனையும் ஆள்வதாத்
தேனின் மேல்மொழி தந்ததே எங்கள் சிறுமை நீக்கு உயர் செல்வமே.

தேவலோக மகளான தெய்வயானை ஒருபக்கமும், அழகிய மானின் மகளான வள்ளியம்மை ஒரு பக்கமும், சோலையின் மணமலர் அணிந்து எழுந்தருளவும், மிக்க அழகுடன் இவ்விருவரின் நடுவே எழுந்தருளிய ஞானத்தலைவன் ஆன சண்முகன், எங்கள் துன்பம் நீக்கி உயர் செல்வமான செவ்வேட்பரமன் நாயாகிய என்னையும் அடிமை கொள்வதாகத் தேனினும் மேலான இன்மொழி தந்தது. 6

5. **அருட்சேறு** = அருளினிமை

ஆலி னீழலி னாலு பேர்தொழ வாசி றென்முக மாயிருந்
தோல மாமறை யுண்மை யீதென வோதி யாண்டவர் சேயெனும்
கோல வேலவன் ஞால வாதனை கொண்டு நான்றொலை யாவணம்
சீல மாங்குண மீந்த தேயெங்கள் சிறுமை நீக்குயர் செல்வமே.

ஆலில் நீழலில் நாலுபேர் தொழ ஆசில் தென்முகமாய் இருந்து
ஓல மாமறை உண்மை ஈது என ஓதி ஆண்டவர் சேய் எனும்
கோல வேலவன் ஞாலவாதனை கொண்டு நான் தொலையா வணம்
சீலம் ஆம் குணம் ஈந்ததே எங்கள் சிறுமை நீக்கு உயர் செல்வமே.

சனகர் முதலிய நான்கு முனிவர்கள் வணங்கக் கல்லாலின் நிழலில் குற்றமில்லாத தென்முகக் கடவுளாய் அமர்ந்து, ஓலமிடும் பெரிய வேதங்களின் உண்மை இதுதான் எனச் சின்முத்திரையால் சொல்லாமல் சொன்ன கடவுளான சிவபெருமானின் புதல்வன் எனும் அழகிய வேலவன், எங்கள் துன்பம் நீக்கும் உயர் செல்வமான செவ்வேட்பரமன், உலக வேதனைகளை நான் அடைந்து ஒழிந்து போகாவண்ணம் சீலமாகும் குணத்தை அளித்தருளியது. 7

என்றும் வாலிய மாறி டாவடி வேசி றந்துள வெம்பிரான்
குன்றின் மேலடி யார்கள் கண்டருள் கூர வோரருள் கூர்ந்துகை
ஒன்றி லேதடி கொண்டு நின்றுள வுண்மை கண்டிட வீணெறிச்
சென்றி டாவகை செய்த தேயெங்கள் சிறுமை நீக்குயர் செல்வமே.

என்றும் வாலியம் மாறிடா வடிவே சிறந்துள எம்பிரான்
குன்றின் மேல் அடியார்கள் கண்டு அருள்கூர ஓர் அருள் கூர்ந்துகை
ஒன்றிலே தடிகொண்டு நின்று உள உண்மை கண்டிட வீண் நெறிச்
சென்றிடா வகை செய்ததே எங்கள் சிறுமை நீக்கு உயர் செல்வமே.

என்றும் இளமை மாறாத உருவம் சிறந்துள்ள எமது கடவுள், பழநிமலைமேல் அடியார்கள் கண்டு அருள் செய்ய ஓர் அருள் கூர்ந்தும், தம் திருக்கை ஒன்றில் தண்டம் ஒன்று கொண்டும் நின்றுள்ள உன்னை அறிய எங்கள் துன்பம் நீக்கும் உயர் செல்வமான செவ்வேட்பரமன், பயனற்ற வழியிற் சென்றிடாவகை என்னைச் செய்தது. 8

கோடெ ழும்புல் வராக வன்சிறு குருளை கட்கொரு தாயென
ஓடி யன்பொ டணைத்து மாமுலை யூட்டி மந்திரி மார்களாக்
கூட லம்பதி யீந்த கோன்றரு குமர னெம்பெரு மான்றனைத்
தேடி நிற்கவி ழைத்த தேயெங்கள் சிறுமை நீக்குயர் செல்வமே.

கோடு எழும் புல் வராக வன் சிறு குருளை கட்கு ஒரு தாய் என
ஓடி அன்பொடு அணைத்து மாமுலை ஊட்டி மந்திரி மார்களாக்
கூடல்அம்பதி ஈந்த கோன் தரு குமரன் எம்பெருமான் தனைத்
தேடிநிற்க இழைத்ததே எங்கள் சிறுமை நீக்கு உயர் செல்வமே.

கொம்பு முளைத்த அற்பமான பன்றியின் வலிய சிறு குட்டிகளுக்கு ஒரு தாய்போல் ஓடி, அவற்றை அன்புடன் அணைத்துப் பெரிய முலையால் பாலை ஊட்டுவித்து, அவற்றை அமைச்சர்களாகக் கூடல் மாநகரில் இருந்துவரச் செய்தருளிய அரசனான சிவபெருமான் தந்த குமரன் ஆன எம்பெருமானை, எங்கள் துன்பம் நீக்கும் உயர் செல்வமான செவ்வேட்பரமன், தேடி நிற்கும்படி என்னைச் செய்தது. 9

ஓது செந்தமி ழானி ரம்பனு பூதி சொன்னவ னோடுநல்
மோத மாமொழி பேசி யேதமு டங்க கொன்றருள் சேயவன்
வேதன் விண்டுவ லாரி செம்பதி வேட்பு றாதவன் வாழ்வவாஞ்
சேத னந்தழை வுற்ற தேயெங்கள் சிறுமை நீக்குயர் செல்வமே.

ஓது செந்தமிழால் நிரம்பு அனுபூதி சொன்னவனோடு நல்
மோதமா மொழி பேசி ஏதம் முடங்கு கொன்று அருள் சேய் அவன்
வேதன் விண்டு வலாரி செம்பதி வேட்புஉறாதவன் வாழ்வு அவாம்
சேதனம் தழைவு உற்றதே எங்கள் சிறுமை நீக்கு உயர் செல்வமே.

சொல்லப்படும் செந்தமிழால் நிரம்பும் கந்தரனுபூதி பாடியருளியவனான அருணகிரிநாதர் உடன், நல்ல உவகையான சிறந்த மொழி பேசிக் குற்றமான நோயை ஒழித்து அருள்புரிந்த சேயவன், எங்கள் துன்பம் நீக்கும் உயர் செல்வமான செவ்வேட்பரமன், பிரமன், திருமால், இந்திரன் ஆகியோருடைய சிறந்த உலகங்களைச் சென்றடைய விரும்பாது, அப்பெருமான் திருவடியில் வாழும் வாழ்வை விரும்பும் அறிவு எனக்குச் செழித்து வளர்ந்தது. 10

ஆகப் பிரபந்தம் ஐம்பத்துமூன்றினும் போந்த திருப்பாடல்	***702***
தெய்வவணக்கச் செய்யுள்	***3***
ஆகத் திருப்பாடல்	***705***